# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.334/மா/2025
நாள் 28.11.2025

T.R. ஸ்ரீநிவாசன்
சென்னை 91 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 12
பெரு நகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் 22.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.07.2025 அன்று பெறப்பட்டு 334/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 22.07.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 12, வார்டு 165க்குட்பட்ட வீராங்கல் கால்வாய் புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் எதிரே செல்லும் கால்வாயினை கான்கிரீட் தடுப்பு சுவர் அமைப்பது, முத்தியால் ரெட்டி 1வது தெருவில் சாலை மட்டத்தில் உள்ள பகுதியில் தடுப்பு சுவர் கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் கால்வாயை முற்றிலும் தூர் வாரி மண் கழிவுகளை அகற்றி மழைநீர் சீராக தடையின்றி செல்வதற்கு நடவடிக்கை எடுத்திடக் கோரி 05.05.2025ல் மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கு மனு வழங்கப்பட்டது.

அதன் பொருட்டு 20.05.2025–ன் பதில் கிடைக்கப் பெற்றேன். அதில் மண்டல அலுவலர் 12 அவர்கள், மாண்புமிகு மேயர் அலுவலகம், மனுதாரர் ஆகியோர்க்கு அனுப்பப்பட்ட பதிலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், இம்மனு சம்பந்தமாக கோட்டம் 165க்குட்பட்ட வீராங்கல் ஓடை செல்லும் பகுதியான முத்தியால் ரெட்டி நகர் 1வது தெரு, சக்தி ஹார்டுவேர்ஸ், புழுதிவாக்கம் இரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் தடுப்பு சுவரின் உயரத்தை அதிகரிக்கவும், குப்பைகள் கொட்டுவது தவிர்க்க வேலி அமைக்கவும், இரும்பு ஷட்டர் அமைக்கவும், மதிப்பீடு பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒப்பம் பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும் எனவும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக கால்வாயினை தூர் வாரி மண் கழிவுகள் அகற்றப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." என பதில் வழங்கி உள்ளார்.

அதன் சார்ந்து 23.05.2025ல் தகவல் கோரிய மனு வழங்கப்பட்டதன்படி 25.06.2025ன் பதில் கடிதம் கிடைக்கப் பெற்றேன். அதில் 23.05.2025ன் மனுவின் வரிசை எண் 3ன் கேள்விக்கு ஒப்பந்ததாரரிடம் பணி ஒப்படைக்கப்பட்டு 6 மாதத்திற்குள் முடிக்கப்படும் என பொது தகவல் அலுவலர், செயற் பொறியாளர் தெரிவித்து உள்ளார்.

ஆனால் மண்டலம் 12ன் மண்டல அலுவலர் மனுதாரரின் 05.05.2025ன் மனுவிற்கு 20.05.2025ல் வழங்கிய பதில் கடிதத்தில் 2025 வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னர் பணிகள் முடிக்கப்படும் என பதில் அளித்துள்ளார்.

அப்படியெனில் 2025 பருவமழைக்கு முன்னர் மனுதாரரின் மனுவில் குறிப்பிட்ட இடங்களில் பணிகள் எப்பொழுது துவங்கி எப்பொழுது முடிக்கப்படும் என தெரியவில்லை. மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் எதிரே செல்லும் திறந்தவெளி கால்வாயில் கான்கிரீட் தடுப்பு சுவர் அல்லது ஷட்டர் அமைத்தால் தான் இப்பகுதி வாழ் மக்கள் வெள்ள பாதிப்பிலிருந்து மீள முடியும். இதுவரை மண்டலம் 12ன் மாநகராட்சி அதிகாரிகள் புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் கான்கிரீட் தடுப்பு சுவர் அமைக்க எவ்வித பணிகளும் தொடங்கவில்லை.

18.07.2025 அன்று தினமலரில் மாண்புமிகு முதலமைச்சர் பருவமழை காலம் துவங்கும் முன் மழைநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டு தண்ணீர் வெளியேற வழி ஏற்படுத்த வேண்டும். வெள்ளம் அபாயம் இருக்கும் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதலில் அங்கு பணிகளை முடிக்க வேண்டும் என மாநகராட்சி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தி உள்ளதாக அரசு செய்தி வந்துள்ளது.

பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து, விசாரணைக்கு ஏற்று விசாரணை தேதி வழங்கி, விசாரணை செய்து புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் எதிரே செல்லும் கால்வாயில் கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைத்தும், முத்தியால் ரெட்டி நகர் 1வது தெரு மாநகராட்சி சாலை மட்டத்தில் உள்ள வீராங்கல் ஓடையின் தடுப்பு சுவரின் உயரத்தினை அதிகரித்தும், வீராங்கல் கால்வாயை முற்றிலும் தூர் வாரி மண் கழிவுகளை வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்னர் பணிகளை பாலாஜி நகர் குடியிருப்பு பகுதியில் வெள்ளம் வராமல், குடியிருப்பு வாசிகள் பாதிக்காத வகையில் மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் உள்ள பாதிப்பு ஏற்படாமல் மக்களை காத்திட போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணிகளை துவங்கிடவும், பருவமழைக்கு முன்னர் பணிகளை முடித்திடவும், உரிய ஆணை பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்12ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் 22.10.2025 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12, பகுதி 37, வார்டு–165க்குட்பட்ட வீராங்கல் ஓடையில் பருவமழைக் காலங்களில் வந்து சேரும் மழை நீரானது, குடியிருப்பு பகுதிகளில் இருந்து விரைந்து தங்குதடையின்றி வெளியேற்றும் வகையில் ரோபாட்டிக் இயந்திரம் மூலம் வீராங்கல் ஓடை தூர்வாரப்பட்டுள்ளது.

மேலும் வீராங்கல் ஓடையில் உபரி நீர் குடியிருப்புபகுதிகளுக்கு புகாவண்ணம் பக்கவாட்டு சுவர் உயரத்தை அதிகரிக்கும் பணி தற்போது முடிக்கப்பட்டுள்ளது.

தவிர, மனுதாரர் கோரிய

- முத்தயால் ரெட்டி 1வது தெரு பகுதியில் வீராங்கல் ஓடை பக்கவாட்டு சுவர் உயரம் அதிகரிக்கப்பட்டது.
- சக்தி ஹார்டுவேர்ஸ் பகுதியில் வீராங்கல் ஓடை பக்கவாட்டு சுவர் உயரம் அதிகரிக்கப்பட்டது. மேலும், வீராங்கல் ஓடையில் பொதுமக்கள் குப்பைகளை எறியாதவாறு கான்கீரிட் சுவரின் மீது இரும்பு வலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் வீராங்கல் ஓடை இரண்டாக பிரிந்து செல்கிறது. ஒரு பகுதி வீராங்கல் ஓடை வளைந்து செல்லும் போது மண்டலம் 12ல் இருந்து மண்டலம் 13 நோக்கி சென்று வேளச்சேரி இரயில் நிலையம் அருகே சாலையைக் குறுக்காக கடந்து சென்று கைவேலி வழியாக சதுப்பு நிலப்பகுதியை அடைகிறது. மேலும், மற்றொரு பகுதி புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் வளைந்து செல்லாமல் நேராக நெடுஞ்சாலைத்துறை உட்புறச் சாலையின் குறுக்கே கடந்து மண்டலம் 14ல் செல்கிறது. வீராங்கல் ஓடை மண்டலம் 14ல் நுழையும் பகுதியில் இரும்பு ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மண்டலம் 12ல், சாலையின் குறுக்காக நீரானது பாயத் தொடங்கும் இடத்தில் இரும்பு ஷட்டர் அமைக்க தேவையில்லை என்று கருதப்படுகிறது. மேலும் இது குறித்து பொதுமக்களிடம் எதிர்ப்பும் உள்ளதால் கான்கீரிட் தடுப்பு சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைக்க இயலாது என தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் திரு. R.சீனிவாசன் அவர்களின் 22.07.2025 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மூன்று பணிகளில் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டும் ஷட்டர் அமைக்கும் ஒரு பணி மட்டும் தற்போதுள்ள நிலையில் அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும் சாலையின் இரண்டு மேற்படி ஷட்டர் அமைக்கும் பணிக்கு பகுதி வாழ் பொதுமக்கள் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர். எனவே, ஷட்டர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட விரிவான அறிக்கை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 28.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 28.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மண்டலம் 12, வார்டு 165க்குட்பட்ட கட்டுப்பாட்டின் கீழ் வரும் புழுதிவாக்கம் MRTS ரயில் நிலையம் அருகில் உள்ள வீராங்கல் கால்வாயின்"OPEN VENT"வழியாக, ஒவ்வொரு ஆண்டின் பருவமழைக் காலங்களில், வீராங்கல் ஓடையில் செல்லும், மழைநீர் திறந்த வெளியாக உள்ள OPEN VENT"வழியாக மண்டலம் 14ன் பகுதிக்கு வருவதால் பாலாஜி நகர் குடியிருப்பு பகுதிகள், வெள்ளத்தில் மிதக்கும்.

இதனை கருத்தில் கொண்டு OPEN VENT"பகுதியில் தடுப்புச்சுவர் அமைத்திடுமாறும், தண்ணீர் வரும் வழியான "முத்தியால் ரெட்டி நகர்" மற்றும் 100 அடி சாலை "கருப்பட்டி காடி" பின்புறம் செல்லும் கால்வாயில் ஷட்டர் அமைத்திடுமாறும் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. அதன்பேரில் மாநகராட்சி ஆணையர், வட்டார இணை

ஆணையர் மேற்கண்ட பகுதிகளை ஆய்வு செய்து, OPEN VENT"பகுதியில் சற்று தள்ளி நேரடியாக தண்ணீர் செல்வதை தடுக்கும் வகையில், சற்று சுற்றி வரும்படி தடுப்புச் சுவர், கால்வாயின் உயரத்திற்கு அமைக்குமாறும், மண்டலம் 12–ன் வழியாக செல்லும் மழைநீரால், மண்டலம் 14, பாதிக்கப்படாமலிருக்கவும் அறிவுறுத்தினர்.

அதன்படி மண்டலம் 12ன் அதிகாரிகள் தடுப்புச்சுவர் அமைக்கும் பணியினை 10.10.2025ல் தொடங்க செய்து, கம்பிகள் கட்டப்பட்டு, கான்கீரிட் போடும் நிலையில் திடீரென அனைத்தையும் அகற்றி விட்டனர். காரணம் கேட்ட போது மண்டலம் 13–ன் செயற்பொறியாளர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார் என்றனர். மண்டலம் 13–ன் உட்பட்ட பகுதிகளிலும் குடியிருப்பு பகுதியில் வெள்ளம் பாதிக்காதபடி, கான்கீரிட் தடுப்பு சுவர்கள் குறிப்பிட்ட உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குறிப்பிட்ட திறந்தவெளி பகுதியை முற்றிலுமாக தடுப்புச் சுவர் கொண்டு அடைக்கப்படவில்லை. "OPEN VENT" கால்வாய் சற்று தள்ளி நேரடியாக தண்ணீர் வராமல் தடுக்கும் வகையில்தான் குறிப்பிட்ட உயரத்தில் "கான்கீரிட் தடுப்பு சுவர்" அமைத்திடுமாறும் மாநகராட்சி உயர் அதிகாரிகள் தெரிவித்ததன்படி, அமைக்கப்பட்டதடுப்பு சுவரினை மண்டலம் 12ன் அதிகாரிகள் அகற்றியதை மீண்டும் அமைத்து தந்திட முறைமன்ற நடுவம் ஆவன செய்து, உத்தரவு பிறப்பித்து, ஆணை வழங்கிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்."

6. எதிர் மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்12ன் செயற்பொறியாளர் (பொ) மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர் 28.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, பகுதி 37, வார்டு எண்.165க்குட்பட்ட வீராங்கல் ஓடையில் பருவமழை காலங்களில் வந்து சேரும் மழை நீரானது குடியிருப்பு பகுதிகளில் இருந்து விரைந்து தங்குதடையின்றி வெளியேற்றும் வகையில் ரோபாட்டிக் இயந்திரம் மூலம் வீராங்கல் ஓடை தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், வீராங்கல் ஓடையில் உபரி நீர் குடியிருப்பு பகுதிகளுக்கு புகாவண்ணம் பக்க வாட்டு சுவர் உயரத்தை அதிகரிக்கும் பணி தற்போது முடிக்கப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் கோரிய விவரங்கள் பின்வருமாறு:–</u>

- முத்தயால் ரெட்டி 1வது தெரு பகுதியில் வீராங்கல் ஓடை பக்க வாட்டு சுவர் உயரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- சக்தி ஹார்டுவேர்ஸ் பகுதியில் வீராங்கல் ஓடை பக்கவாட்டு சுவர் உயரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், வீராங்கல் ஓடையில் பொதுமக்கள் குப்பைகளை எறியாதவாறு கான்கீரிட் சுவரின் மீது இரும்பு வலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் வீராங்கல் ஓடை இரண்டாக பிரிந்து செல்கிறது. ஒரு பகுதி வீராங்கல் ஓடை வளைந்து செல்லும் போது மண்டலம் 12ல் இருந்து மண்டலம் 13 நோக்கி சென்று வேளச்சேரி இரயில் நிலையம் அருகே சாலையைக் குறுக்காக கடந்து சென்று கைவேலி வழியாக சதுப்பு நிலப்பகுதியை அடைகிறது. மேலும், மற்றொரு பகுதி புழுதிவாக்கம் இரயில் நிலையம் அருகில் வளைந்து செல்லாமல் நேராக நெடுஞ்சாலைத்துறை உட்புறச் சாலையின் குறுக்கே கடந்து மண்டலம் 14ல் செல்கிறது. வீராங்கல் ஓடை மண்டலம் 14ல் நுழையும் பகுதியில் இரும்பு ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மண்டலம் 12ன் சாலையில் குறுக்காக நீரானது பாயத் தொடங்கும் இடத்தில் இரும்பு ஷட்டர் அமைக்க தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இது

குறித்து பொது மக்களிடம் எதிர்ப்பும் உள்ளதால் கான்கீரிட் தடுப்பு சுவர் அல்லது இரும்பு ஷட்டர் அமைக்க இயலாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக உரிய புகைப்பட நகல்களை சமர்ப்பிக்கிறோம்.

- மேலும் மனுதாரர் திரு.சீனிவாசன் என்பவர் மண்டலம் 13ல் ஹார்ட்டின் என்பவர் கூறியதால் வேலை நிறுத்தப்பட்டது என கூறியதற்கு நாங்கள் தெரிவிப்பது யாதெனில்,

- மண்டலம் 13ல் உள்ள பொது மக்கள் அவர்களது செயற்பொறியாளரிடம் இவ்வாறு வீராங்கல் ஓடையில் தடுப்புச் சுவர் கட்டினால் தங்களது பகுதியில் நீர் மட்டம் உயர்ந்துவிடும் எனத் தெரிவித்துள்ளனர். அவர் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களிடம் இதனைத் தெரிவிக்கவே அவர் தற்போது ஷட்டர் போட்டிருப்பதால் அங்கு சுவர் எதுவும் எழுப்ப வேண்டாம் என தொலைபேசியில் மண்டல அலுவலரிடம் தெரிவித்ததால் வேலை நிறுத்தப்பட்டது. மேலும் இந்த மழைக்கு ஷட்டர் எப்படி உபயோகத்தில் உள்ளது எனத் தெரிந்து கொண்டு சுவர் கட்டுவது பற்றி யோசிக்கலாம் என்று கூறியதால் வேலை நிறுத்தப்பட்டது..

- மேலும் பழவந்தாங்கல் சுரங்கப்பாதையிலிருந்து வெளியேற்றப்படும் நீரானது கண்ணன் காலனி வழியாக இருப்புப் பாதையின் அடியில் செல்லும் கால்வாய் வழியாக தில்லை கங்கா நகரை அடைந்து அங்கு நெடுஞ்சாலைத்துறையின் உள்வட்டச் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மூலம் ஆரம்பாக்கம் ஏரியை அடைந்து அங்கிருந்து வெளியேறும் நீர் வீராங்கல் ஓடை வழியாகப் பாய்கிறது என தெரிவிக்கப்பட்டது.

- CMRL X பணிகளால் ஆக்கிரமிப்பட்டிருந்த ஏரியானது தற்போது தோராயமாக 450 மீ. X நீளம் 41 மீ. அகலத்துக்கு மண் அகற்றப்பட்டு அதிக அளவில் நீர் பிடிக்கும் பகுதியாக மாற்றப்பட்டுள்ளது என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12, வார்டு 165க்குட்பட்ட வீராங்கல் ஓடையில், புழுதிவாக்கம் இரயில் நிலையம் மற்றும் முத்தையால்ரெட்டி 1வது தெரு ஆகியவற்றின் பகுதியில் தடுப்புச் சுவர் உயரத்தை அதிகரிக்கவும், அல்லது ஷட்டர் அமைக்கவும், வீராங்கல் கால்வாயை முற்றிலும் தூர் வாரும் பணிகளை 2025 பருவ மழைக்கு முன்னர் முடிக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் கோரியவாறு, முத்தையால்ரெட்டி 1வது தெரு பகுதியில் வீராங்கல் ஓடை பக்கவாட்டு சாலை உயரம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதும், பொது மக்கள் குப்பைகளை எறியாதாவாறு சக்தி உறார்டுவேர்ஸ் பகுதியில் உள்ள வீராங்கல் ஓடையின் கான்கீரிட் சுவரின் மீது இரும்பு வலை அமைக்கப்பட்டுள்ளது என்பதும், ஏற்கனவே வீராங்கல் ஓடையில் மண்டலம் 14–ன் அலுவலகத்தால் அப்பகுதியில் இரும்பு ஷட்டர் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மண்டலம் 12–ல் வீராங்கல் ஓடையில் இரும்பு ஷட்டர் அமைக்க பொதுமக்களின் எதிர்ப்பு உள்ளதால், இரும்பு ஷட்டர் அமைக்க அவசியமில்லை என்பதும், மேலும், இந்த மழைக் காலத்தில் (2025 ஆம் ஆண்டு) மேற்படி ஷட்டர் எப்படி உபயோகத்தில் உள்ளது என தெரிந்துக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டுவது பற்றி பின்னர்

ஆய்வு செய்யலாம் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 12—ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர் (பொ), உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் கோரியவாறு, முத்தையால் ரெட்டி 1வது தெரு பகுதியில் வீராங்கல் ஓடை பக்காட்டு சுவரின் உயரம் அதிகரிக்கப்பட்டும், சக்தி ஹார்டுவேர்ஸ் பகுதியில் வீராங்கல் ஓடையின் பக்கவாட்டு சுவர் அதிகரிக்கப்பட்டு, இரும்பு வலை அமைக்கப்பட்டு உள்ளது. வீராங்கல் ஓடை மண்டலம் 14—ல் நுழையும் பகுதியில், வீராங்கல் ஓடையில் அமைக்கப்பட்டுள்ள இரும்பு ஷட்டரின் உபயோகத்தை தெரிந்து கொண்டு, மண்டலம் 12—ல் வீராங்கல் ஓடையின் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து பின்னர் முடிவு செய்யலாம் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12—ன் செயற்பொறியாளர் (பொ) மற்றும் உதவிப் பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளதை எழுத்து பூர்வமாக பெற்று, அடுத்த பருவ மழை காலத்திற்குள் உரிய முடிவு எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12—ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்
மனை என் 86, கதவு எண் 3/2
பாலாஜி நகர், 23வது தெரு
புழுதிவாக்கம்,
சென்னை 91.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

(3) மாவட்ட வருவாய் அலுவலர் /மண்டல அலுவலர்,
மண்டலம் 12,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 121 நாகிரெட்டி தோட்டம்,
கிண்டி, சென்னை 600 032.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை—600 032